செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Insitution under Ministry of Education, Government of India, New Delhi)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

**பயிலரங்கம் - 4**

# தமிழ் அகராதியியல் பயிலரங்கம்

(03.05.2021 - 09.05.2021)

## அறிவிப்பும் அழைப்பும்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செவ்வியல் இலக்கியங்களில் காணலாகும் வழக்குச் சொற்களைச் சமகாலப் பேச்சு வழக்குச் சொற்களோடு ஒப்பிட்டு அகராதியாக்கும் பணியினை 2007ஆம் ஆண்டுமுதல் மேற்கொண்டு வருகிறது. மொழிக்கு வளமை சேர்ப்பதில் அகராதியியலின் பங்கு மகத்தானது. சொற்கள் அகராதிப்படுத்தப்படவில்லையெனில் காலப்போக்கில் அழிந்து போகக்கூடிய நிலை ஏற்படும். தொல்காப்பிய உரியியலில் அகராதிக் கூறுகள் அமைந்துள்ளன. அதனால், தமிழ் மொழியில் இலக்கண இலக்கியங்களுக்குப் பொருள் அறிய உதவும் அகராதிகளின் முன்னோடியாகத் திகழ்வது தொல்காப்பியம் ஆகும்.

சொற்பொருள் கூறும் துறையில் மிகவும் இன்றியமையாததாக விளங்கும் உரியியலில்,

“உறு தவ நனி என வரூஉம் மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப”   (தொல் .சொல். உரி. 3)

எனும் நூற்பாவில், உறு என்னும் சொல் முதலாக எறுழ் என்னும் சொல் ஈறாக வரும் உரிச்சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

தமிழ் ஆய்விற்குச் சொற்பொருள் விளக்கங்கள் மிகுதியான அளவில் தேவைப்படுகின்றன. அகராதியியல் அறிமுகம், தமிழ் அகராதிகளின் வகைகள், தமிழ் வழக்காற்றியலும் செவ்வியலும், தமிழ்ச் செவ்விலக்கியச் சொல்லடைவும் தொடரடைவும், வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கிய அகராதிகள், தமிழ் இலக்கண இலக்கியக் கலைச் சொற்கள், அகராதிகளின் பயன்கள் ஆகியவை குறித்து ஆராயப்பட

வேண்டிய தேவையுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அகராதியியல் ஆய்வினை வளப்படுத்தும் நோக்கிலும், பேராசிரியர்கள் பயன்பெறும் நோக்கிலும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஏழு நாள் பயிலரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் அகராதியியல் துறையில் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்கள் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். முதல் ஐந்து நாள்களில் அகராதியியல் கோட்பாடுகள் குறித்தும், இறுதி இரண்டு நாள்களில் அகராதி ஆக்கப் பயிற்சிகளும் அளிக்கப்பட உள்ளன.

**பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் கீழ் வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 03.05.2021 முதல் 09.05.2021 வரை (தொடர்ந்து 7 நாள்கள்).
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopd@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் ஆணை அனுப்பி வைக்கப்படும்.

11. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
12. விண்ணப்பம் வந்து சேரவேண்டிய இறுதி நாள் 23.04.2021. இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 26.04.2021 அன்று மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

## தமிழ் அகராதியியல் பயிலரங்கம்

**(03.05.2021 – 09.05.2021)**

## விண்ணப்பப் படிவம்

நிழற்படம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பதவி/பணிநிலை | | |
| | நிரந்தரம்/தற்காலிகம் | | |
| 3. | பிறந்த நாள்/ வயது | | |
| 4. | பாலினம் | | |
| 5. | வகுப்பு (✓ செய்க) | | பொது [ ] இ.பி.வ. [ ] பட்டியல் இனத்தவர் [ ] |
| 6. | கல்வித் தகுதிகள் | | |
| 7. | பணியில் சேர்ந்த நாள் | | |
| 8. | நிறுவன முகவரி<br>(தொலைபேசி/ மின்னஞ்சல்<br>முகவரியுடன்) | | |
| 9. | இல்ல முகவரி<br>(தொலைபேசி/ மின்னஞ்சல்<br>முகவரியுடன்) | | |
| 10. | புலன எண் | | |
| 11. | சிறப்பறிவு பெற்றுள்ள துறை | | |

| | | |
|---|---|---|
| 12. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | |
| 13. | தாங்கள் பணியாற்றும் கல்வி நிறுவனம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2 (F) மற்றும் 12 (B) அங்கீகாரம் பெற்றுள்ளதா? ஆம் / இல்லை ஆம் எனில் விவரம் தரப்படல் வேண்டும் | |

நாள் : **(கையொப்பம்)**

இடம்:

**உரிய முத்திரையுடன்**

**முதல்வர்/ பதிவாளரின் கையொப்பம்**